7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2013), மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் . . . (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், ஏதாவது சொல்ல வேண்டுமா? சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவிலே இருக்கிற 6-வது பிரிவின் மூன்றாவது உட்பிரிவில் இந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வகுத்துரைக்கப்பட்ட மதிப்பூதியம் பெறுவார்கள் என்றிருக்கிறது. அதை மாற்றி, அவர்கள் கால வரைமுறைப்படுத்தப்பட்டு ஊதியம் வழங்கப்படுவது என்று திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோன்று, பிரிவு 10(2)-ல் இந்த இளைஞர் படையிலே இருப்பவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னால், அவர்கள் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் முடிவே இறுதியானது மற்றும் நீதிமன்றங்கள் ஏதும் இதிலே கேள்வி எதுவும் எழுப்பப்படுதல் ஆகாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

@ 7-2-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 பிப்ரவரி 8

ஒருவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரது மேல்முறையீட்டிலே மேலதிகாரி நடவடிக்கை எடுத்து முடிவாகிவிட்டால் அதற்கு மேலே நீதிமன்றத்திற்குப் போவதற்கு அவருக்கு உரிமையில்லை என்று சொன்னால் அவரது உரிமை பாதிக்கப்படும். எனவே, நீதிமன்றத்திற்கு யாருக்கும் செல்வதற்கு உரிமையிருப்பது அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற திருத்தம் தேவையென்று கருதுகிறேன்.

'பிரிவு 11-ல், இப்படிப்பட்ட இந்த படையிலே இருப்பவர்கள் ஏதாவது தவறு செய்துவிட்டால் அல்லது வேறு ஏதாவது பணிகளை விட்டுவிட்டால் அவர்கள்மீது வழக்கு, குற்ற வழக்கு எதுவும், அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலாகாது' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அவர்மீது மனித உரிமை வழக்கோ அல்லது குற்ற வழக்கோ தொடுப்பதற்கு வாய்ப்பில்லாவிட்டால், அவர்கள் தவறுகள் செய்வதற்கு அது ஒரு வாய்ப்பாக ஆகிவிடும். எனவே, எல்லோருக்கும் நீதிமன்றத்தில் சட்ட வழக்குகளுக்கு உரிமை இருக்கிற காரணத்தினால் அவர்கள்மீதும் வழக்கு பதிவு செய்வதற்கு அல்லது சட்ட நடவடிக்கை தொடுப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையிலே இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக

இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)